ஈழமுரசு

# மீண்டும் ம~~கிந்த~~ரணை ஆட்சி

சிறீலங்காவின் அரியணையில் மீண்டும் மகிந்த ராஜபக்ச ஏறியிருக்கின்றார். மகிந்த சிந்தனை என்ற அறிவிப்புடன் கடந்த 2004ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் குதித்து வெற்றி பெற்ற மகிந்த ராஜபக்ச, வரலாற்றில் யாரும் செய்திருக்காத அளவிற்கு மிகவும் மோசமான, வெளிப்படையான இனப்படுகொலையை செய்தவர் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது.

மகிந்த அரசின் இந்த இனப் படுகொலைகள், அயர்லாந்தின் தலைநகர் டப்ளின் நகரில் நடைபெற்ற நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, சிறீலங்காவை மானுடத்திற்கு எதிராக குற்றம் இழைத்துள்ள ஒரு நாடாகவும், போர்க் குற்றவாளி நாடாகவும் அடையாளம் காட்டியிருக்கின்றது. சிறீலங்காவின் தேர்தல் வரலாற்றில் என்றும் இல்லாத அளவிற்கு மிக மோசமான தேர்தல் வன்முறைகளுடன் இடம்பெற்ற தேர்தல் இதுவென தேர்தல் ஆணையகமே கூறியிருக்கின்றது. எனினும் சர்வதேச ரீதியில் இத்தனை அபகீர்த்தியை ஏற்படுத்திய மகிந்த ராஜபக்சவையே மீண்டும் தங்களது ஜனாதிபதியாக சிறீலங்கா மக்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

இந்தத் தேர்தலில் மகிந்தவுடன் கூட்டிணைந்து இனப்படுகொலை புரிந்த சரத் பொன்சேகாவே எதிராகப் போட்டியிட்டார். ஆனாலும், மகிந்த அரசின் மோசமான இனப்படுகொலையில் இருந்து தப்பித்த தமிழ் மக்கள், ஒரு மாற்றத்தை ஏற்படுத்த விரும்பி, சிறீலங்காவின் இந்தத் தேர்தலில் தமக்கு அக்கறையில்லாதபோதும், சரத் பொன்சேகாவிற்கு தமது ஆதரவை வழங்க முனைந்தார்கள். இதன்மூலம் சீரழிந்துபோன தமது வாழ்வை மீண்டும் மீளக்கட்டியமைப்பதற்கான ஒரு கால அவகாசம் கிடைக்கும் என்று அவர்கள் நம்பியிருந்தார்கள். தமிழ் மக்களின் நிலைமையைப் புரிந்துகொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்க முன்வந்தது.

ஆனால், தேர்தல் தினத்தன்று தமிழ் மக்களின் பிரதேசங்களில் மிகவும் திட்டமிட்ட ரீதியில் நடைபெற்ற தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களும், அச்சுறுத்தும் நடவடிக்கைகளும் பல இலட்சக் கணக்கான தமிழ் வாக்குகாளர்கள் வாக்களிக்கமுடியாத நிலைமையை ஏற்படுத்தியது. ஆனாலும், வடக்கு, கிழக்கின் தேர்தல் முடிவுகள் சரத் பொன்சேகாவிற்கு அதிகளவான வாக்குகளை பெற்றுக்கொடுத்திருப்பது மட்டுமல்ல, தேர்தல் முடிவுகள் இன்னொரு அதிர்ச்சியான தகவலையும் இந்த உலகிற்கு சொல்லியிருக்கின்றது.

அதாவது, தேர்தலில் தமிழர் தாயகம் முழுமையாக (இதில் மலையகமும் அடங்கியுள்ளது) சரத் பொன்சோவிற்கும், சிங்கள தேசம் முழுமையாக மகிந்த ராஜபக்சவிற்கும் தமது ஆதரவை வழங்கியதன் மூலம் இலங்கையில் இரு தேசிய இனங்கள் வாழ்கின்ற இரு நாடுகள் இருக்கின்றன என்பதை இந்தத் தேர்தல் வெளிப்படுத்தியிருக்கின்றது.

கடந்த தேர்தலில் ரணில் தோற்றுப் போனமைக்கும், மகிந்த ராஜபக்ச வெற்றி பெற்றமைக்கும் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களை வாக்களிக்காது தடுத்ததே காரணம் என்று மேற்குலகம் குற்றம்சாட்டியது. அந்தத் தேர்தலின் முடிவுகளின் பின்னரேயே ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் மீதான தடையையும் கொண்டுவந்தது. இந்தத் தடையானது சிறீலங்கா அரசு, தனது இன அழிப்புப் போரை இலகுவாக முன்னெடுப்பதற்கு வழிவகுத்தும் கொடுத்திருந்தது.

இதேவேளை, தமிழ் மக்களின் இந்த அவலத்திற்குக்கு காரணம் விடுதலைப் புலிகளின் தவறான முடிவே என சிறீலங்காவின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், மற்றும் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் சிலரும் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர். ஆனால், இன்றைய தேர்தல் முடிவுகள் இவர்களின் குற்றச்சாட்டுக்களை எல்லாம் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது.

அத்துடன், கடந்த மகிந்தவின் ஆட்சியில் பெரும் அழிவுகளையும், அவலங்களையும் சந்தித்த தமிழ் மக்கள் இன்னும் அதிலிருந்து மீண்டெழவில்லை. இந்நிலையில் தற்போது மகிந்த மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, தமிழ் மக்களை மேலும் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது. எதிர்க்கட்சியாக நின்று போட்டியிட்டவருக்கே இத்தனை நெருக்கடிகளைக் கொடுக்கும் மகிந்த அரசு, அவரை ஆதரித்ததற்காக தமிழ் மக்களுக்கு எவ்வாறான அவலங்களை ஏற்படுத்தப் போகின்றதோ..?

**மகிந்த குடும்பத்தின் அடுத்த ஆட்சி என்பது, தமிழ் மக்களுக்கு இன்னொரு ‘மரண ஆட்சி’யாகவே இருக்கும் என்பதில் எள்ளவும் சந்தேகம் இல்லை.**

# மறைக்கப்பட முடியாத சிறீலங்காவின் போர்க் குற்றங்கள்

**பீற்றர் போக்கற்**

ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் 2009 மே மாதம் போர் முடிவடைந்தவுடன் இலங்கை சென்றிருந்த போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போர்க்குற்றங்கள் தொடர்பில் தாம் விசாரணை நடாத்துவதாக உறுதியளித்திருந்தார். ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தான் அளித்த அந்த உறுதிமொழியைக் காப்பாற்றவில்லை. இப்போது பந்து பான் கீ மூன் வசம் உள்ளது. ஒரு சுயாதீனமான சர்வதேச ரீதியான விசாரணையை நடாத்தி இலங்கையில் என்ன நடந்தது என்பது குறித்த உண்மையை அவர் வெளிக் கொண்டு வர வேண்டும். அங்கு நடைபெற்ற முக்கியமான போர்க் குற்றங்களை வெளிக்கொணர தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இலண்டனிலிருந்து வெளியாகும் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பீற்றர் போக்கற் என்பவர் எழுதியுள்ள அக்கட்டுரை வருமாறு: சிறீலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் ஜோர்ஜ் ஓவலின் நாவலைத் தான் ஞாபகப்படுத்துகிறது. சிறீலங்காப் படையினர் தாங்கள் கைது செய்து தடுத்து வைத்திருந்தவர்களை நிர்வாணமாக்கி படுகொலை செய்தமையை மறுக்கமுடியாதபடி கடந்த ஜனவரியில் செல்பேசியில் எடுக்கப்பட்ட வீடியோ ஒன்று வெளியாகியது. சிறீலங்கா அரசாங்கம் எவ்வித ஆதாரங்களையும் சமர்ப்பிக்காமலேயே அந்த வீடியோ போலியானது என்று தெரிவித்திருந்தது.

இப்போது இவ்வாறான வீடியோக்கள் மற்றும் சுடுகலன்கள் குறித்த ஆய்வில் நிபுணத்துவம் வாய்ந்த மூன்று நிபுணர்களைக் கொண்டு அந்த வீடியோவை ஆய்வு செய்து வெளியிட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, சட்டபூர்வமற்ற படுகொலைகள் குறித்து சர்வதேச ரீதியாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஐ.நாவின் விசேட பிரதிநிதி அந்த வீடியோக் காட்சிகள் உண்மையானவை என்று தெரிவித்திருக்கிறார்.

ஐ.நாவின் விசேட பிரதிநிதியான பிலிப் அல்ஸ்ரன் இது குறித்த பிபிஸிக்குக் கருத்துத் தெரிவிக்கையில், மிகக்குறுகிய தூரத்திலிருந்து இவ்வாறான ஒரு ஆயுதத்தால் சுடும் போது ஒரு மனித உடல் வெளிப்படுத்தும் பிரதிபலிப்பை போலியாக உருவாக்கிட முடியாது என்று தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும் வழமை போல அவரது அறிக்கை பக்கச்சார்பானது என்று மறுத்த சிறீலங்கா அரசு ஐ.நா விசேட பிரதிநிதி தனிப்பட்ட காரணங்களுக்காக சிறீலங்கா மீது போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவை குறித்து விசாரணை நடாத்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறது.

சிறீலங்காவின் இந்தப் பதில் ஆச்சரியமானதல்ல. சிறீலங்கா அதிகாரிகளிடம் இவ்வாறான பக்கச்சார்பானவர்களின் பெரிய பட்டியலே உள்ளது. சிறீலங்கா தொடர்பாக இறுதி யுத்தத்தின் போது ஏழாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டது குறித்து விமர்சனங்களை யார் யாரெல்லாம் முன்வைக்கிறார்களோ அவர்களெல்லாம் பக்கச்சார்பானவர்களின் பட்டியலுக்குள் அடக்கப்பட்டு விடுவார்கள். என்னுடைய நிறுவனமும் அதற்கு விதிவிலக்காகவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகம், மற்றும் சர்வதேச மனித உரிமை அமைபுக்கள், ஐ.நா நிறுவனங்கள், ஐரோப்பிய ஒன்றியம், பிபிசி, சனல் 4, மேலும் பல ஊடக நிறுவனங்கள், எங்களுடைய நண்பர்களான இலங்கையிலுள்ள மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள். எல்லோரையுமே பக்கச்சார்பானவர்களாகக் குற்றம்சாட்டி விடுகிறது சிறீலங்கா அரசு. இது இலங்கையின் நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது. இதன்காரணமாக பலர் தமது உயிருக்கஞ்சி நாட்டை விட்டு புலம்பெயர்ந்துள்ளார்கள். அவ்வாறில்லாமல் அங்கு நின்றவர்கள் அதற்கான விலையைச் செலுத்த நேர்ந்தது.

ஆனால் இந்த நிலைமையில் சடுதியாக ஒரு மாற்றம் நிகழ்ந்தது. கடந்த வருடம் நடைபெற்ற மோதலுக்கு தலைமை தாங்கிய தளபதியான சரத் பொன்சேகா தனது முன்னாள் தலைவருக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் இறங்கினார். அவர் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் போரின் இறுதி நாட்களில் நடைபெற்ற சரணடைந்த விடுதலைப் புலிகளைக் கொல்வதற்கான உத்தரவை ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்பு செயலாளருமான கோத்தபாய ராஜபக்சவே பிறப்பித்தருந்தார் எனத் தெரிவித்திருந்தார். அவர் பின்னர் அதனை தவறான அறிக்கையிடல் என்று சொல்லியிருந்தாலும் அவர் எதை வெளிப்படுத்த விரும்பியிருந்தார் என்பது வெளிப்பட்டிருந்தது.



**உணமையிலேயே இந்த காணாமல் போனவர்கள் பற்றிய விடயங்களை தோண்ட விரும்பினால் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கைகளைப் பார்வையிடலாம். அவற்றிலிருந்து பல உண்மைகள் வெளிவரும்.**

வெளியிடப்பட்ட வீடியோ ஒன்றும் தவறானது அல்ல. ஆனால் துயரார்ந்த வகையில் கடந்த 26 வருடப் போரில் சிறீலங்கா அரசாங்கத்தாலும் விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் குறித்து எவருமே விசாரிக்கப்படவோ தண்டனைக்குள்ளாக்கப்படவோ இல்லை. அந்த இருண்ட நாட்களில் ஏராளமான அப்பாவி மக்கள் காணாமல் போனார்கள். வெள்ளைவான் கடத்தல்கள், காணாமல் போனவர் குறித்த தகவல் தேவை என்பன போன்ற விடயங்கள் உள்ளூர் தினசரிகளில் நாளாந்தம் வெளிவரும் விடயங்களாக இருந்தன. காணாமல் போனவர்களுடைய உறவினர்களின் இறுதி முயற்சியாக இது இருந்தது இலங்கையின் போரின் இறுதி நாட்களில் என்ன நடைபெற்றது என்பதனை சிறீலங்கா மறைக்க முயற்சிப்பது ஒரு வீணான முயற்சியே.

உணமையிலேயே இந்த காணாமல் போனவர்கள் பற்றிய விடயங்களை தோண்ட விரும்பினால் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கைகளைப் பார்வையிடலாம். அவற்றிலிருந்து பல உண்மைகள் வெளிவரும். மார்ச் 2008 அறிக்கை அந்த துயரங்களை வெளிப்படுத்துகிறது. இலங்கையில் காணாமல் போதல்கள் மற்றும் கடத்தல்கள் அரசாங்கத்தின் பொறுப்பு என்பது அந்த அறிக்கையின் தலைப்பாகும்.

காணாமல் போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களுடைய குடும்பங்களுடன் எமது விசாரணையாளர்

*(31ம் பக்கம் பார்க்க)*